இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 284 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 11 – ஞாயிற்றுக்கிழமை 25 மே 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 283 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 11 - Sunday 25 May 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.5.2025) புதுடெல்லியில், காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களையும், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற மக்களவை கழக குழு தலைவர் டி.ஆர்.பாலு உடனிருந்தார்.

## திருமதி சோனியா காந்தி - ராகுல் காந்தியுடன் சந்திப்பு: சிறப்பு அரவணைப்பு - குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வு அளிக்கிறது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

புதுடெல்லி, மே 25 -

புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற 'நிதி ஆயோக்' கூட்டத்தில் பங்கேற்பதற்காக புதுடெல்லிக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் இரவு திருமதி சோனியா காந்தி மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், திருமதி சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரை சந்திக்கும் போது ஒரு சிறப்பு அரவணைப்பு இருக்கிறது என்றும் இது வெறும் சந்திப்பாக இல்லாமல், குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வையே அளிக்கிறது என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**திருமதி சோனியா காந்தி அவர்களையும், அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களையும் தில்லியில் அவர்கள் வசிக்கும் இல்லத்தில் ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் ஒரு சிறப்பு அரவணைப்பு இருக்கிறது. ஒருபோதும் இது வெறும் சந்திப்பாக இல்லாமல், குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வையே அளிக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## எம்.பி.க்கள் – முன்னணியினர் – பொதுமக்கள் திரண்டு வரவேற்றனர்!

# முதல்வருக்கு புதுடெல்லியில் சிறப்பான வரவேற்பு !

## 'நிதி ஆயோக்' கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார்!

**புதுடெல்லி, மே 25 -**

**'நிதி ஆயோக்' கூட்டத்தில் பங்கேற்பதற்காக, சென்னையில் இருந்து புதுடெல்லி சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி உள்ளிட்டோர் விமான நிலையத்தில் சிறப்புற வரவேற்றனர்.**

அதன் விபரம் வருமாறு:-

நிதிப் பகிர்வில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிற்கு வழங்க வேண்டிய 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் கல்வி நிதியை நிறுத்தி வைத்துள்ளது. இதனால் தமிழ் நாட்டில் 43 லட்சத்து 94 மாணவர்கள், 2 லட்சத்து 21 ஆயிரம் ஆசிரியர்கள், 32 ஆயிரத்து 701 இதரப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மெட்ரோ ரயில் 2ஆம் கட்டத் திட்டம்! நிதியை விடுவிக்காமல் பாரபட்சம்!**

இதேபோல், சென்னை மெட்ரோ ரயில் 2ஆம் கட்டத் திட்டத்திற்கான நிதியையும் ஒன்றிய அரசு இதுவரை வழங்கவில்லை. பேரிடர் நிவாரண நிதியையும் விடுவிக்காமல் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது.

'ஃபெஞ்சல்' புயல் பாதிப்புக்கு 37 ஆயிரத்து 906 கோடி ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்தது. ஆனால், 'ஃபெஞ்சல்' புயல் பாதிப்புக்கு ஒன்றிய அரசு உரிய நிதியை வழங்கவில்லை.

2023ஆம் ஆண்டு சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புக்கு 19 ஆயிரத்து 692 கோடி ரூபாய் ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்றும் - இதேபோல், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் தர வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஏற்கனவே வலியுறுத்தியது.

**ஜி.எஸ்.டி. நிதியும் தரப்படவில்லை!**

100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ் நாட்டிற்கு இன்னும் ஆயிரத்து 35 கோடி ரூபாயை ஒன்றிய அரசு விடுவிக்காமல் உள்ளது. தமிழ்நாட்டிற்கான ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையையும் ஒன்றிய அரசு விடுவிக்காமல் உள்ளது.

ஒன்றிய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கை உயர்த்த வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில், 'நிதி ஆயோக்' அமைப்பின் 9வது நிர்வாகக் குழுக் கூட்டம் புதுடெல்லியில் நேற்று பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றது.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னையிலிருந்து நேற்று முன்தினம் காலை புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.

"தமிழ்நாட்டிற்கான நியாயமான நிதி உரிமையை நிதி ஆயோக் கூட்டத்தில் வெளிப்படுத்த டெல்லி செல்கிறேன். கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பேன். தமிழ்நாட்டிற்கான நிதியைப் போராடிப் பெறுவேன்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதிபடக் கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.

**விமான நிலையத்தில் வரவேற்றோர்!**

புதுடெல்லி சென்றடைந்த முதல்வர் அவர்களை விமான நிலையத்தில் - நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கலாநிதி வீராசாமி, க.செல்வம், பி.வில்சன், டி.எம்.செல்வகணபதி, கே.ஆர். என்.ராஜேஷ் குமார், தரணிவேந்தன், அருண்நேரு, மலையரசன், முரசொலி, ஆ.மணி, தங்க தமிழ்ச்செல்வன், இரா.கிரிராஜன், கதிர்ஆனந்த், ராணி ஸ்ரீகுமார், சுதா, தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., திருப்பூர் மேயர் தினேஷ், புதுடெல்லி தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையர் ஆஷிஷ்குமார் ஐ.ஏ.எஸ். உள்பட பலரும் பொன்னாடைகள் அணிவித்தும், பூங்கொத்துகள் வழங்கியும் வரவேற்றார்கள்.

---

### துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான வழக்கு

## சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு தேவையற்ற அவசரம் !

### "தி இந்து" ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, மே 25 –

துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தேவையற்ற அவசரம் என்று "தி இந்து" ஆங்கில நாளிதழ் (23.5.2025) விமர்சித்துள்ளது. அரசியலமைப்பு அதிகாரத்தின் கீழ், ஒரு மாநிலம் இயற்றிய சட்டத்தை, எதோ ஒரு கீழ்நிலை அதிகாரி வரையறை செய்த யுஜிசி விதிமுறைகளால் மீற முடியுமா? என்றும் "தி இந்து" ஆங்கில நாளிதழ் தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தேவையற்ற அவசரம் என்ற தலைப்பில் "தி இந்து" ஆங்கில நாளிதழ் தலையங்கம் தீட்டியுள்ளது. அதில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வந்ததால் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடியது என்றும் இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றம் மிக முக்கியமான தீர்ப்பை வழங்கியது



THE HINDU

Misplaced urgency

The Madras High Court has in effect undermined a Supreme Court ruling

By staying the operation of Tamil Nadu's multiple amended Acts – to the extent that they empower the government to appoint Vice-Chancellors (V-Cs) of 18 State un-

என்றும் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவது, பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதலமைச்சரை நியமிப்பது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய 10 சட்ட மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் தனக்குரிய சிறப்பு அதிகாரம் மூலம் ஒப்புதல் அளித்தது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் பல ஆண்டுகளாக நீடித்த பிரச்சனைக்கு உச்சநீதிமன்றம் தீர்வு கண்டது என்றும் "தி இந்து" ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சட்டங்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய விடுமுறை கால அமர்வு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம், துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மீண்டும் ஆளுநருக்கு வழங்கு வதை வழிவகை செய்ய முயல்வதாக "தி இந்து" ஆங்கில நாளிதழ் கூறியுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள 12 பல்கலைக்கழகங்கள் துணை வேந்தர்கள் இல்லாமல் செயல்படும் நிலையை உயர்நீதிமன்ற உத்தரவு ஏற்படுத்தி இருப்பதாகவும் சாடியுள்ளது. துணைவேந்தர்கள் தொடர்பான முந்தைய வழக்கின் முரண்பட்ட தீர்ப்புகளை உதாரணமாக கூறி, யுஜிசி விதிமுறைகளுக்கு எதிராக இந்த சட்டங்கள் இருப்பதாக உயர்நீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர். இந்த வழக்கை உச்சநீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கான மனுவை அவசரமாக பட்டியலிடக் கோரி உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு குறிப்பிட்ட போது, இந்த விவரத்தை உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் கூறியதையும் உயர் கல்வித்துறை சார்பில் தெரிவிக்கப் பட்டது.

ஆனால், இந்த வாதத்தை உயர் நீதிமன்றம் புறக்கணித்தது. மேலும், தமிழ்நாடு அரசு சார்பில் பதிலளிக்க போதிய அவகாசம் தராமலேயே சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளதாக "தி இந்து" ஆங்கில நாளிதழ் விமர்சித்துள்ளது.

அரசியலமைப்பு அதிகாரத்தின் கீழ், ஒரு மாநிலம் இயற்றிய சட்டத்தை, எதோ ஒரு கீழ்நிலை அதிகாரி வரையறை செய்த யுஜிசி விதிமுறைகளால் மீற முடியுமா? என்ற முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ள "தி இந்து" தலையங்கம், துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான இப்பிரச்சினைக்கு உச்சநீதிமன்றம் உடனடியாக நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

---

### இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவோம்!

## ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்தது !

### மாஸ்கோவில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி !

**மாஸ்கோ, ரஷ்யா, மே 25 -**

**"இந்தியா தீவிரவாத தாக்குதலை எதிர்கொண்டிருக்கும் நேரத்தில் ரஷ்யா உடனான பேச்சுவார்த்தை மிகவும் முக்கியமானது" என்று அந்நாட்டிற்குச் சென்றுள்ள எம்.பி.க்களின் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் தொடர்பாகவும், தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயல்படுவது குறித்தும் சர்வதேச நாடுகளுக்கு விளக்கம் அளிக்க, அனைத்துக் கட்சியினரையும் உள்ளடக்கிய 7 குழுக்களை ஒன்றிய*



*அரசு அமைத்துள்ளது.*

*ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்ல 8 பேர் கொண்ட குழுவின் தலைவராக, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நியமிக்கப் பட்டார்.*

*இந்நிலையில், கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான எம்.பி.க்கள் குழு ரஷ்யா சென்றடைந்தது. ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் இந்தியாவும் - ரஷ்யாவும் பல்வேறு விவகாரங்களில் நீண்ட காலமாக ஒன்றாக இணைந்து பணியாற்றி வருவதாக தெரிவித்தார். தீவிரவாத தாக்குதலை இந்தியா மீண்டும் எதிர்கொண்டிருக்கும் இந் நேரத்தில், ரஷ்யா உடனான பேச்சுவார்த்தை மிகவும் முக்கியமானது என்றும், இந்த பயணத்தில் ரஷ்ய வெளியுறவுத் துறை துணையமைச்சர் மற்றும் பல்வேறு அதிகாரிகள், அமைப்புகளை சந்தித்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்க இருப்பதாகவும் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கூறினார்.*

*இதனிடையே, ரஷ்யாவின் மாஸ்கோவை குறிவைத்து உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலால், கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான எம்.பி.க்கள் சென்ற விமானம் தரையிறங்குவதில் தாமதம் ஏற்பட்டது. சில மணி நேரங்களுக்கு பிறகு, எம்.பி.க்களின் விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியது. அவர்களை இந்திய தூதரக அதிகாரிகள் வரவேற்று பத்திரமாக அழைத்துச் சென்றனர்.*